Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol 42 — No. 2

ACC-NO -34341

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 42 | கீலக மாசி 1969 பிப்ரவரி | இதழ் 2

உ ள் ளு றை பக்கம்

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்,

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குமரகுருநாத முதலி தெருவிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 2-3-69 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக்கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, பிற பொருள்கள் பற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

(செயலாளர்)

நம் சமாஜச் சார்பில் 29-1-'69 புதன் மாலை திருமயிலை கபாலீச்சுரத்தில் சித்தாந்த வித்தகர் திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் அவர்கள் "சைவ சித்தாந்தச் சிறப்பியல்புகள்" என்பது பற்றிச் சிறந்த சொற்பொழிவு ஆற்றினார்கள். சமாஜத் தலைவர் திரு கோ. மு. முத்துசாமிப் பிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு) தலைமை வகித்தார், திரு C. N. சிங்காரவேல் முதலியார் வரவேற்புரையும் திரு அம்பை சங்கரனார் நன்றியுரையும் புகன்றனர்.

சமாஜச் செயலாளர் திரு. மு. நாராயணசாமி முதலியார் மணிவிழா நினைவாக திரு. K. L. பழநிசாமி பி. ஏ., எல். டி. அவர்கள் சென்ற மாதம் சமாஜ ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்தார்கள். தற்போது சமாஜ முன்னாள் செயலாளர் திரு எஸ். வடிவேலு பிள்ளை பி ஏ., எல். டி. அம்மணிவிழா நினைவாகவே ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

85. வேளாளர் தெரு, புலியூர், சென்னை-24.

நம் சமாஜத் துணைத்தலைவர் திரு. K. E. அருணாசல முதலியார் எம். ஏ., பி.காம் (4 வாசு தெரு, கீழ்ப்பாக்கம் சென்னை-10) அவர்கள் சமாஜ ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் B A. சமாசச் செயற்குழுவிலிருந்தும் ஆங்கில "சைவ சித்தாந்த" ஆலோசனைக் குழுவிலிருந்தும் தாம் விலகுவதாக எழுதிய கடிதம் 2-2-69 அன்று நிகழ்ந்த செயற்குழுக் கூட்டத்தில் படிக்கப் பெற்று ஏற்றுக்கொள்ளப் பெற்றது. அவருக்குப் பதில் திரு. N. குருசாமி அவர்களைச் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றது.

அரியலூர் மணிவாசக மன்றத்தின் சார்பில் பாவைவிழா அல்லூர்ப் பெருமாள் கோவிலில் திரு T. S வெங்கட்ராமய்யர் பி ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் 11-1-1969 அன்று நிகழ்ந்தன. திரு. அ நடேச முதலியார், திரு. சா. சிவப்பிரகாசம் பிள்ளை, திரு. இரா. கண்ணப்பா முதலியார் சொற்பெருக்காற்றினர். மாணவர்கட்குப் பரிசளிப்பும் நிகழ்ந்தது.

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 42	கீலக ஞூ மாசி 1969 பிப்ரவரி	இதழ் 2

சமாஜ 63–ஆம் ஆண்டு நிறைவு விழா
சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை

திருமதி டாக்டர் தாரா நடராசன்

அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறும்
குறியது உடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்து அங்கு
அறிவினுள் அறிவாய் மன்னி அம்மையோடு அப்பனாகிச்
செறிவொழியாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்

—சிவஞான சித்தியார்

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே!

—திருவாசகம்

சிவநெறிச் செல்வியர்களே, அன்பர்களே, பெரியோர்களே, வணக்கம். தமிழ்நாட்டுக் கலை வளரும் தலைநகரமான நம் சென்னை மாநகரம் சீரும் சிறப்பும் எய்துவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, நம் திருமயிலை பெரும் புகழ் பெற்று விளங்கிய பெருமையுடையதாகும். திருவள்ளுவ

நாயனாரின் பிறப்பு நினைப்பும், திருஞான சம்பந்தப் பெருந் தகையின் திருத்தொண்டின் உறைப்பும் இத்திருநகரின் புகழுரிமையாக விளங்குகிறது. திருமயிலைக் கபாலீச்சரத்தின் தனிப்பெரும் விழாவாக அறுபத்துமூவர் திருவிழா நடைபெறுவது போல அறுபத்துமூவரும் மேற்கொண்டொழுகிய சித்தாந்தச் செந்நெறியை ஓம்பும் நம் சமாஜத்தின் 63-ஆம் ஆண்டுவிழா கற்பகாம்பாள் உடனமர்ந்த கபாலீச்சுரர் திருப்பெயர் அமைந்த திருமண மாளிகையில் நடைபெறுவது பொருத்தமும் பொலிவும் உடனமைந்த அமைவுடையதாகும். சைவசித்தாந்த விழாவின் ஒரு பகுதியாகிய இம்மங்கையர் மாநாட்டின் தலைமையைத் தந்து என்னைச் சிறப்பித்த சமாஜ விழாக் குழுவினர்க்கு என் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்,

சமாஜச் செயற்குழுவினர் இப்பணியை ஏற்க வேண்டுமென என்னைக் கேட்டபோது என்மனம் தயங்கியது. என் கல்வியோ தொழிலோ இப்பணியை ஏற்பதற்கு உரிய தகுதியுடையன அல்லவே, அவ்வாறு இருக்க இதனை எப்படி ஏற்பது என்பதுதான் தயக்கம். ஒருசமயம் நான் தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை ஆண்டு விழாவில் மங்கையர் பகுதிக்குத் தலைமையேற்று இயன்ற பணிபுரிந்தது நினைவுக்கு வந்தது. அந்த அனுபவத்தைப் பற்றி இதனை ஏற்கலாமே என்றால் இப்பொழுதுள்ள எனது சூழ்நிலை, கல்வி முயற்சி, தொழில்வகை இவையாவும் வேறுபட்டுள்ளனவே என்ற என்ற தடையும் மனத்தில் எழுந்தது. பின்னர் ஒரு தெளிவும் பிறந்தது. நான் மருத்துவத் தொழில் புரிபவள். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை ஆற்றும்போதெல்லாம் இறைவன் திருவருளை நேருக்குநேர் உணரும் வாய்ப்பைப் பெறலாம். மருத்துவர் கையாளும் கருவி தனது அளவில் தனது பணியை முற்றுவிக்கும. அதனால் நிறைவெய்த வேண்டிய நற்பலனை யார் நல்குவது? கருவியா, இவர்களுக்கு மேலான கருவியேந்தியவரா என்று எண்ணிப் பார்த்தால்

முயற்சி நம்முடையது. முடிவோ இறைவனுடையது என எளிதில் அறியலாம். இவ்வகையில் இறையருளை எல்லாக் காலத்தும் எவ்விடத்தும் எண்ணிக்கொண்டிருக்கும் இயல்பு, மருத்துவத் தொழிலுக்குப் பெரிதும் வேண்டற்பாலதாகும். இந்த அடிப்படையோடு பிறப்பிலே அமைந்த எங்கள் குடும்பத்தின் சிவ நெறியொழுக்கத் தொடர்பும், என் புகுந்த வீடாகிய சித்தாந்த கலாநிதியின் இல்லச் சிறப்பும் சைவ சமுதாயத்தின கூறுகிய தகுதியில் சிறப்புடையனவாகும். இவைகளையெல்லாம் எண்ணியபோது இவ்விழாவில் பங்கு பெறுவது முறையே என்ற துணிவு பிறந்தது. என்றாலும் சைவநூற் கல்வி போதிய அளவு இல்லாத குறை எனக்கு அச்சத்தைத் தந்த வண்ணம் இருக்கிறது. இந்நிலையில் உங்களைக் காணும் போது 'பத்துடையீர் ஈசன்பழ அடியீர் பாங்குடையீர், புத்தடியோம் புன்மை தீர்த்தாட் கொண்டாற் பொல்லாதோ' என்ற திருவெம்பாவைத் திருவாசகமே என் நினைவில் இப்போது நிற்கிறது.

அரிய தமிழ் நூல்களை அடக்க விலையில் வெளியிட்டுத் தமிழர் அனைவரும் இலக்கிய நல்லுணர்வு பெறுமாறு நம் சமாஜம் ஆற்றிய தொண்டுகளை எவரும் மறக்க முடியாது. மேலும் தன் பெயருக்குரிய வகையில் சைவ சித்தாந்த மகா சமாஜம் அறுபது ஆண்டுகட்கு மேலாக நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று விழா நடத்திச் சமயப் பணி புரிந்து வருகிறது. எத்தனையோ பெரும புலவர்களும் பாவலர்களும், கலந்து சைவம் வளரச் சைவ நூல்களை வெளியிட்டும், சைவ சித்தாந்தம் பொருளாகச் சொற்பொழிவுகள் செய்தும்கூட நம்நாட்டு மக்களிடையே நல்ல அளவில் சைவவுணர்வும், சைவ ஞானமும் பெருகியதாக இல்லை. சைவ வழிபாடும் ஒழுக்கமும் பெரிதும் பரவவில்லை என்றே தோன்றுகிறது.

வாழ்க்கையில் தோன்றியுள்ள எண்ணற்ற மாறுதல்களால் தேவைகள் பெருகியுள்ளன. அவைகளை நிறைவு செய்தற்கு வேண்டும் பொருள் முயற்சிகள் பலதிறமாய்

விட்டன. பொருள் பற்றிய நினைவும் செய்கையும் முதலிடம் பெறுவதால், சமய உணர்வு பெருகவோ பெருக்கிக் கொள்ளவோ போதிய வாய்ப்பு இல்லை என்று பலரும் சொல்கின்றார்கள். இதே நிலையில் உள்ள கிறித்தவ இசுலாமியக் குடும்பங்கள் தம் சமய ஞானவொழுக்கங்களைக் கடைப்பிடித்து வருகின்றன அவர்கள் தொகையும் பெருகுகிறது. அதற்கேற்ப அவர்களின் சமயமும் ஆக்கம்பெற்று வருகிறது. அவர்களுடைய சமய நெறிகளை மதித்து, மக்களரசும் அவர்கட்கெனச் சட்டங்களை வகுத்துக் காப்பளித்து வருகிறது. இதை நோக்குவோமாயின் நம்மிடையே சமயவுணர்வு ஒழுக்கங்களில் போதுமான பற்றும் கடைப்பிடிப்பும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவை ஏன் இல்லாமற் போயின என்று எண்ணிப் பார்க்கவேண்டும். எண்ணிப் பார்த்த சிலர் நம்மிடையே சாதி இன வேற்றுமைகளைக் காட்டி உண்மைக் காரணத்தை மறைக்கிறார்கள். ஆனால் நாயன்மார்களின் வரலாற்றைப் பார்த்தால் அங்கே பல்வேறு சாதிகளும் இனங்களும் இருந்திருக்கின்றன என்றாலும் சைவநெறி தலைசிமிர்ந்து விளங்கியிருக்கிறது. ஆகவே சாதியின் வேற்றுமைகளால் சமுதாயத்தில் உண்டாகும் மேடுபள்ளங்களைப் பொருட்படுத்தாமல் ஒருமைச் சமயமாக ஓங்குதற்குச் சமயவுணர்வு பெருந்துணையாக இருந்திருக்கிறது. சிலர் சமுதாய ஒருமைக்குக் கலப்பு மணம தகுந்ததென நினைக்கின்றார்கள். அதற்கும் சிவநெறி விசிந்த இடம் தந்திருப்பதைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாறு குன்றின் மேலிட்ட விளக்கெனக் காட்சி தருகின்றது. இதனால் சமுதாய நலத்துக்கும் ஒருமைக்கும் சைவம் மிகுந்த ஆதரவு தந்திருப்பதைக் காணலாம்.

தொழில் வேற்றுமைதான் சமயப் பற்றுக்குத் தடையென்று நினைப்போமாயின் நாயன்மாரிடையே எத்தனையோ வகையான தொழில்கள் இருந்தும் சமயவொழுக்கத்துக்குத் தடை செய்யவே இல்லை. அவைகளால் சிவநெறியும் தடையுண்டு ஒளியிழந்ததேயில்லை. இல்லாதவர் உடையவர்

என்ற பொருளாதார வேற்றுமையும் சமய வாழ்வில் குறுக் கிட்டுத் தீங்கு செய்யவில்லை.

அப்படியாயின் சைவப்பற்றும் விடாப்பிடியும் நம் மிடையே இல்லாமற் போனதற்குக் காரணம் யாது? சைவ வுணர்வு என்னும் சிவஞானமும் அதனைச் செயற்படுத்தும் சைவவொழுக்கமும் மக்களுக்கு நல்லபடி உணர்த்துவதற்கு வாய்ப்பில்லை. அதுதான் இக்குறைபாட்டிற்குக் காரணம என்று கூறுகின்றனர். அதனைச் சிறிது ஆராய்வோம். நோய் வரலாற்றையும் அதன் குறிகளையும் ஆராய்ந்தாலன்றி அதற்கு மருந்து கொடுக்க முடியாது. 'நோய்நாடி நோய் முதல் நாடி அது தீர்க்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்று திருவள்ளுவரும் உரைக்கின்றாரல்லவா?

நாட்டில் அரசியல் பொருளாதார உணர்வுகளைப் பரப்பு தற்குப் பொது மேடைகள் உள்ளன. அங்கே இலக்கியம் நாடகம், இசை ஆகியவற்றுக்கு இடமுண்டு. ஆனால் சமயத் துக்கு இடமில்லை. சமயத்தைப்பற்றிப் பொதுமேடையில் பேசினால், பலசமயத்தவர்க்கும் பொது என்ற காரணங்காட்டி மறுப்பர். கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் என்ற கல்வி நிலையங்கள் சமயச்சார்பற்ற அரசாலும் அதன் உதவியாலும் நடப்பதால் குறிப்பிட்ட ஒரு சமயத்தைப்பற்றி—நமது சைவத்தைப்பற்றிப்—பேசவோ, மாணவர்க்கு உரைக்கவோ இடமில்லை.

கோயில்கள் உண்டே எனில் அங்கே அபிடேக, அருச்சனை ஆராதனை முதலியவற்றுக்குத்தான் முதலிடம். பட்டர்களின பொருள விளங்காத அர்ச்சனை முழங்கும். சமய ஞானத்தையோ ஒழுக்கத்தையோ உரைப்பதற்கு அங்கும் ஆள் இல்லை. கோயிலுக்குப் போவது, கும்பிடு வது, வீடு திரும்புவது இவைதான சைவஞானம், சைவ வொழுக்கம் என்றே கருதி விடுகிறோம்.

பொது மேடைகளும் கல்வி நிலையங்களும் கோயில்களும் சமயவுணர்வு பெறுதற்குத் துணைசெய்ய முடியாதெனின் குடும்பங்களைத்தான் பார்க்கவேண்டும். குடும்பங்களில் ஆடவரும் பெண்களும் வேறுவேறு தொழில் செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர். குடும்ப வாழ்வில் பெருகி வரும் தேவைகளையும், பொருளின் விலைகளையும் பார்க்கும் போது கணவனும் மனைவியும் சமநிலையில் உழைத்து வருவாய் பெருக்கினாலன்றி அமைதியான வாழ்வு பெற முடியாது. விடியலில் எழுந்து குளித்து மூழ்கித் தொழிலுக்கு முன்னணியாக வேண்டியவைகளைச் செம்மை செய்து கொண்டு போகவும் தொழில் பார்க்கவும் ஓய்ந்து திரும்பவும் உண்டு உறங்கவுமே போதிய காலம் இருப்பதில்லை. இந்நிலையில் சமயவுணர்வு பெருக்கவோ பெற்ற மக்கட்கு உரைக்கவோ இயலுவதில்லை. சமயச் சார்பான சிறப்பு நாட்கள் வரின் அப்போது உண்பன சமைத்துக் கோயிலைப் போலவே தெய்வத்துக்குப் படைத்து உண்டு உறங்குவது மாபும் ஒழுக்கமுமாக இருக்கிறதேயன்றி சமயஞான ஒழுக்கங்களை அறியவோ சிந்திக்கவோ வசதியில்லை. இதனால் நம் சமுதாயம் ஞான ஒழுக்கங்களை அறியும்வகை சிறிதும் இல்லாத சிவஞான சூனிய சமுதாயமாக இருப்பது நன்கு காணலாம். இச்சமுதாயத்தில நெஞ்சிலும் பேச்சிலும் செயலிலும் சைவவுணர்வு இடம் பெறாமல் இருக்கிறது. இத்தகைய காரணங்களால் நம் சைவ சமயம் இருந்தும் இல்லாமலும் விளங்கியும் விளங்காமலும் இருக்கிறது.

இதனை இப்படியே இருக்க விடுவதா? உயர்ந்தோங்க வழி காண்பதா? அதற்கு ஏற்ற வழி யாது? இவைதான் நம் முன் நிற்கும் சிக்கல்களாகும்.

இப்படியே விட்டொழிவோமாயின் நாட்டில் தன்னலவுணர்வே பெருகிச் சமுதாய ஒருமை வலி பெறாது கெடும். கிறித்தவ இசுலாமிய சமுதாயத்திடையே காணப்படும் அளவுகூட நம் சமுதாயம் நலம் பெறாது தனித்தனியாகப் பற்றின்றிப் பிரிந்து போகும். உலகம் வகுத்துள்ள வாக்

குரிமைச் சட்டம் கூட கணவன் மனைவியரிடையே மாறுபாடு ஏற்படுத்தி இருவரும் வேறுவேறு கருத்துக்கொண்டு வாக்கு நல்கும் வகையைச் செய்துள்ளது. தேர்தல் காலங்கள் இக்கருத்து வேற்றுமையை வெளிப்படுத்துகின்றன. கருத்தொருமையுண்டாக்கி ஒற்றுமை வளர்க்கும் கொள்கையில்லாமையால் சாதியின் வேற்றுமைச் சழக்குகள் ஒரு பக்கம் நுழைந்து மக்களில் ஆணொருபக்கம் பெண்ணொரு பக்கம் மனத்தால் பிரிந்து செல்லும சூழ்நிலையை இப்போது உருவாக்கி வருகின்றன. இதனை இப்படியே விடுவது உலகியல் வாழ்வைத் துன்ப நிலையமாக்கும். செல்வாக்குடைய தலைவர்கள் இதற்கு மாற்றொன்றைச் சிந்திப்பதும் கடமையாகும். சைவ சமய உணர்வு ஒன்றுதான் மனவொருமையையும் ஒற்றுமையையும் உண்டாக்கும் தகுதியுடையது. இதனை மெய்கண்ட தேவர் 700 ஆண்டுகட்கு முன்பே உரைத்துள்ளனர். அதன்படி இந்நாளைய சைவ மக்கள் ஒழுகவில்லை. சாதிசமய வேற்றுமைச் சழக்குகட்கு இரையாகி, 'ஆக்கைக்கே இரைதேடி அலமந்து, காக்கைக்கே இரையாகிக் கழிக்கின்றார்கள்.' சைவத்தனி முதலாகிய சிவபரம்பொருள்,

'சாதி மதம் சமய முதல் சங்கற்ப
விகற்ப மெலாம் தவிர்ந்து போக
ஆதி நடம்புரிகின்றான்'

என்று வடலூர் அடிகள் வகுத்து உரைக்கின்றார்.

'சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும்
பாங்கினில் ஓங்கிய ஞானம்'.

என்பதை இன்றைய சைவர்களாகிய நாம் கைவிட்டு விட்டோம். இதனை மீளக் கடைப்பிடிப்பதுதான் இன்றைய மனநிலையை மாற்றி நம்மை உயர்ந்த வாழ்வும் இன்பமும் பெற்று ஓங்கச் செய்யும்.

பொருளில்லார்க்கு இவ்வுலகில் வாழ்வில்லை என்பர் திருவள்ளுவர். ‘பொருளிலே உலகம் இருப்பது’ என்பர் இராமலிங்கவள்ளல். இன்றைய நமும் பொருளில்தான் நாட்டமுடையவராக இருக்கின்றோம். பொருள் மிக இருப்பினும் இறைவன் திருவருள் துணை செய்தால்தான் அதனை அனுபவிக்க முடியும். வகுத்தான் வகுத்தவகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது என்பதன்றோ வள்ளுவர் வாய்மொழி! அனுபவிக்க முடியாத செல்வம் இருந்தால் என்ன பயன்? திருவருள்தான் செல்வத்துக்கெல்லாம் தலையான செல்வம். ‘அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்’ என்று திருமறை முழங்குகிறது.

திருவருளை உணர்ந்து அதன் வழி ஒழுகுவதுதான் உணர்ந்தோங்கும் சைவ வாழ்வு. திருவருள் என்பது யாது? அதனை எவ்வாறு உணர்வது? உணர்ந்தால்தானே அதன் வழி ஒழுகிச் சைவ இன்ப வாழ்வு பெறலாம் என்ற கேள்விகள் இங்கே எழுகின்றன.

இம்மார்கழி மாதம் சைவர்கள் திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் ஓதும் காலம். இவற்றில் மணிவாசகப் பெருமான் இக் கேள்விகட்கு விடையும் விளக்கமும் தருகின்றார்.

நாம் வாழும் காலம் சிவனுடையது. அவன்தான் இதற்கு ஆதி. இந்த உலகம் உடைந்து அணுவாகிப் பின் ஆற்றலாய் (சத்தியாய்) ஒடுங்கும் காலம் வருமாயின் முடிவில் அவனது திருவடியில் ஒடுங்கும். இதனைப் ‘போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர், போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்’ என்று திருவெம்பாவை கூறுகிறது. எனவே இவ்வுலகிற்கு அந்தமும் ஆதியும் சிவமே என்று அறிகின்றோம். சிவஞானபோதமும் சிவனை ‘அந்தம் ஆதி என்மனார் புலவர்’ என்று தெரிவிக்கின்றது. இவ்வுலகில் நாம் தோன்றி, உலகப் பொருளை உண்டு, வளர்ந்து உடம்பை உலகிலே ஒழித்து விடுகின்றோம். இவ்வுலகிற்கு

நாமாக வருவதில்லை, இவ்வுலகைவிட்டு நாமாக நீங்குவதில்லை. நம்மைத் தோன்றச் செய்வதும் உண்பதை உண்டு வாழச் செய்வதும் உடம்பைவிட்டு நீங்கச் செய்வதும் சிவ பரம்பொருளே. இதனைப் 'போற்றி எல்லா வுயிர்க்கும் ஈறும் இணையடிகள்' என்று திருவெம்பாவை கூறுகிறது. இதனால் நாம் உலகில் பிறப்பதும் வாழ்வதும், முடிவில் இறப்பதுமாகிய எல்லாவற்றிற்கும் சிவ பரம்பொருளே முதல் என்று அறிகின்றோம்.

இங்கே ஒரு கேள்வி எழுகின்றது. உலகைப் படைத்து உடம்பைக் கொடுத்து உலகில் வாழ வைக்கின்றானே, இதனால் இறைவனுக்கு என்ன பயன்? அவனைக் 'குறைவிலா நிறைவு' என்பர். அவனுக்கு ஏதேனும் குறையிருந்தால் தானே இதனைச் செய்து பயனடைகின்றான் என்று நினைக்கலாம். ஆதலால் அவனுக்கு இதனால் பயன் இல்லை. உலகப் பொருள்களான நிலம் நீர் காற்று முதலியன அறிவில்லாதவை. அவற்றைக் கூட்டியும் பிரித்தும், பெருக்கியும் சுருக்கியும் என்ன செய்தாலும் அவற்றுக்குப் பயனில்லை. இறைவனுக்கும் பயனில்லை. உலகுக்கும் பயனில்லை என்றால் பின் யாருக்குப் பயன்? உயிர்களாகிய நமக்குத்தான் பயன். ஆகவே நமக்காகத்தான் படைத்தல் முதலிய இந்த ஐந்து தொழில்களையும் சிவன் செய்கின்றான். என்ன பயன் என்றால் நாள்தோறும் இவ்வுலக அனுபவம் பெற்று அறிவு வளர்ச்சி பெறுகிறோம். அதனால் தீயவைகளின் தீமை கண்டு நீங்குகிறோம். நல்லதன் நலம் கண்டு மேற்கொண்டு இன்புறுகின்றோம். நாம் அறிவு பெருகி இன்பம் பெறுதற்கென்றே இறைவனாகிய சிவன் நமக்கு இவ்வுலக வாழ்வைப் படைத்து அளித்துள்ளான் என்று தெளியலாம். 'விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளே உன தொழுப்படி யோங்கள் மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே' என்று திருப்பள்ளியெழுச்சி கூறுகிறது.

மேலும், மண்ணக வாழ்வு நாம் நல்லது மொழிந்து நல்லது செய்து புகழும் இன்பமும் பெறுதற்காகவே அமைந்

தது. இது பெற்றவர்களே ஞானமும் இன்பமும் நிறைந்த பெருவாழ்வு பெறுவர். அறியாமைத் துன்பங்களிலிருந்து உய்தி பெறுவர். இதையும் மணிவாசகப் பெருமான் தேவர் தம்முள் பேசுவதாகத் திருப்பள்ளியெழுச்சியில் தெரிவிக்கின்றார். 'புவனியில் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே, இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு' என்று திருமால் மண்ணக வாழ்வை விரும்புகிறார், பிரமனும் ஆசைப்படுகின்றார் என்று உரைக்கினறார். எனவே மக்களாகிய நாம் நமது அறிவைப் பெருக்கி நல்லதே நினைந்து நல்வாழ்வு பெற்றுச் சிறப்பதற்காகவே சிவபிரான் உலகவாழ்வைத் தந்துள்ளான் என்று சிவனை நினைப்பதுதான் சைவம். இவ்வாறு நாம் உய்தி பெறுதற்காக இவ்வுலக வாழ்வை அளித்ததற்குக் காரணம் அப் பெருமான் நம்மிடத்திற்கொண்ட அருளேயாம.

அந்த அருள்தான் நாம் நினைந்து வழிபட இருப்பது. அதன் பெருமையை முதன்முதலில் ஞானசம்பந்தர் முதலிய அருளாளர்கள் தோன்றுதற்கு முன்னே தோன்றிய காரைக்கால் அம்மையார் எடுத்து உரைத்தார். 'அருளே உலகெல்லாம் ஆள்விப்பது ஈசன் அருளே பிறப்பறுப்பது ஆனல்—அருளாலே மெய்ப்பொருளைக் காணும் விதியுடையேன்' என்று அம்மையார் மொழிகின்றார்.

அந்த அருளாற்றலின் பெருமையறிந்து, அருள்நெறி சார்தலையே சமயம் என்று பொதுவாகக் கூறலாம். இந் நல்லுணர்வு வாழ்வின் தொடக்கத்தே எல்லோர்க்கும் தோற்றம் பெறுதுகூடப் போகலாம். ஆனல் அறிவும் தெளிவும் சிந்தனையும பெருகி முறுகத் தொடங்கும்போது இவ் வுணர்வு மெல்லத் தலையெடுத்து விளக்கம் பெறும். மனிதன் எண்ணுவதும் ஆராய்வதும் உடையவன். இவ்வாராய்ச்சி அறிவு அவனை வியக்கத்தக்க விஞ்ஞான முடிபுகளைக் காணவும் அறியவும் செய்துள்ளது. நாளுக்கு நாளும், நொடிக்கு நொடியும் மாறுபடும் புதிய வளர்ச்சி நிலைகள் விஞ்ஞானத் துறையில் தோன்றுகின்றன. இப்படி நுணுகிச் செல்லும்

ஆராய்ச்சி, பின்னர் குறையுடைய பொருளுக்குத் தானே வளர்ச்சி என்ற குறிப்பைக் காட்டி விடுகின்றது. பின்னரே உலகமும் அறிவும் நினைவும் பிறவும் ஆதியோடந்தம் மாறி மாறி வளர்ந்து வளர்ந்து தேய்ந்து ஓயும் என்ற உண்மையை நாம் துணிய முடியும். உண்மையோடு செம்மையேயாகிய அச்சிவ பரம்பொருள் ஆதியும் அந்தமும் இல்லாதது என்று தெளிந்து நாம் தெய்வம் என்பதோர் சித்தம் கைவரப் பெறுதல் ஓர் அரியதொரு கலையேயாகும். எனவே மிக எளிமையாகவும் இளமையாகவும் உள்ளபோதே அதனை அறிவது அருமையுடையதுதானே! ஏறத்தாழ எல்லோரும் தம் வாழ்வின் இரண்டாவது பகுதியிலாவது தெய்வ உணர்வு கைவரப் பெறுகின்றனர். அவ்வுணர்வின் முழுமையாலேயே அவர்கள் தம் நோய் நீங்கி நிறைநலத்தோடும் வாழ முடியும் என்று பேராசிரியர் ஜங் கூறுகின்றார்.

அந்த அருளே நினைந்து வாழ்ந்ததனால் திலகவதியார் திருநாவுக்கரசரைச் சிவம் பெருக்கும் பெருமானாக்கினார். மங்கையர்க்கரசியார் திருஞான சம்பந்தரைக் கொண்டு சைவ வாழ்வு தமிழ்நாட்டில் நிலைபெற்றுத் தழைக்கச் செய்தார். பிற்காலத்தில் செம்பியன் மாதேவியார் திருக்கோயில்கட்குப் பணிபுரிந்து அவற்றைத் திருவருள் ஞான நிலையங்களாக்கினார். குந்தவைப் பிராட்டியார் தஞ்சைப் பெரிய கோயிலை எழுப்பத் தூண்டினார்.

கால மாறுதலால் மங்கையர் கல்விக்கண் இழந்து பாரதியார் உரைப்பதுபோல் ஊமையராய்ச் செவிடர்களாய் குருடர்களாய் விலங்குகளாய் மாறினர். சைவத் திருவருள் நினைவும் பயிற்சியும் கைவிட்டனர். இன்று எய்தியிருக்கும் சூழ்நிலை மங்கையர்க்கு எல்லா வாய்ப்பும் வசதியும் தந்துள்ளது. ஆனால் அவர்கள் வடலூர் வள்ளலார் கூறுவது போல்,

‘மாலிலே மயங்கி மண்ணிலே அநித்ய
வாழ்விலே வரவிலே மலஞ்சார்

தோலிலே ஆசைவைத்து வீண்
பொழுது தொலைக்கின்றார்'
'மதத்திலே சமய வழக்கிலே மாயை
மருட்டிலே இருட்டிலே மறவாக்
கதத்திலே மனத்தை வைத்து வீண்
பொழுது கழிக்கின்றார்'
'குலத்திலே சமயக் குழியிலே நரகக்
குழியிலே குமைந்து வீண்பொழுது
நிலத்திலே போக்கி மயங்கி
ஏமாந்து நிற்கின்றார்'

என்று கூறவேண்டியிருக்கிறது.

இன்றைய சூழ்நிலைக்குக் காரைக்காற் புனிதவதியும் திருவதிகைத் திலகவதியும் மதுரை மங்கையர்க்கரசியும் வேண்டப்படுகின்றனர். அவர்களுடைய அருள் ஞானமும் அருளொழுக்கமும் நம்மை வாழ்விக்கும்.

இத்தகைய பெருமாட்டிகளைத் தோற்றுவிக்கும் நோக்கம் கொண்டே சைவ சித்தாந்த மகாசமாஜம் மங்கையர் மாநாட்டைக் கூட்டி ஆண்டுதோறும் சிவ நெறியை நினைவுறுத்தி வருகிறது என்று நினைக்கிறேன். 'முயற்சி மெய் வருத்தக் கூலி தரும்'.

இவ்வகையில் வேறு துறையில் செல்கின்ற எம்போல்பவரை இத்துறையில் ஈடுபடுத்திய திருவருளை வாழ்த்தி எனக்கும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பை அளித்த சமாஜ ஆண்டுவிழாக் குழுவினர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விழாவில் பங்குகொண்டு சொற்பொழிவு செய்ய வந்திருக்கும் திருவருட் செல்வியர்களின் செஞ்சொற்பெருக்கினைக் கேட்டுத் தெளிவும் இன்பமும் பெறுமாறு வேண்டி என் சிற்றுரையை முடிக்கின்றேன்.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத்து ஆண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

—திருவாசகம்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்!

சமாஜ மாநாடு

(ஆசிரியர்)

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 63ஆம் மகாநாடு முன் ஏற்பாடு செய்தபடி சென்னை மயிலை-கபாலீசர் கற்பகாம்பிகை திருக்கல்யாண மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. நடந்த மண்டபம் மிக்க சிறப்புடைய தாதலால், மகாநாடு மிக்க அலங்காரமாக இருந்தது. நிகழ்ச்சிகளின் விரிவைத் தனியே காணலாம். மகாநாட்டுக்கு முக்கிய பொறுப்பேற்ற சமாஜத்தலைவர் திரு, கோ. மு, முத்துசாமிப் பிள்ளையவர்கள் சேவை மிகவும் பாராட்டுதற்குரியது. அவர்களே ஆங்கிலத்தில் சமயாசாரியார் பற்றி ஒரு நூலெழுதி வெளியிட்டிருந்தார்கள். இதனோடு சமாஜத் திருவாசகப் பதிப்பும் வெளியாயிற்று. மேலும் இவ்விழா மலராக ஆங்கிலம் தமிழ்க் கட்டுரைகள் அடங்கிய ஒரு சிறப்பு மலரைத் தலைவரே வெளியிட்டிருந்தார். இவற்றுக்காகத் தலைவருக்குச் சைவ மக்களின் பாராட்டுதல் உரியது.

இரண்டாம் நாள் பிற்பகல் மகாநாடு, தலைவர் வராமையால் உபதலைவர் திரு. வரதராசம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று இரவு ஓதுவார் சுந்தரேச தேசிகர் முயற்சியால், அங்கம் பூம்பாவை என்ற நாடகம் நடிக்கப் பெற்றது. நடித்த பெண்கள் சிறப்பாக நடித்தார்கள். சிறப்

பாக திருவாசகப் பதிகங்கள் பலவற்றுக்கு-உந்தி–தெள்ளேணம், பூவல்லி, பொன்னூசல். அபிநயம் பிடித்து ஆடியது மிகவும் அழகுபெற அமைந்திருந்தது. இவ்வாறு பொது மேடைகளில் வெறும் கூத்துக்கள் நடைபெருமல், பொருள் பொதிந்த திருமுறைப் பாடல்களின் ஆட்டங்கள் நடைபெற்ருல், சமய உணர்வு வளர்வதற்குப் பேருதவியாயிருக்கும், இதை எளிதில் அழகுபெறச் செய்ய முடியும் என்பதற்கு இந்த நாடகம் சிறந்த எடுத்துக் காட்டாய் அமைந்திருந்தது;

இறுதிநாள் மாலே தலேவர் பேசிய கருத்துக்களில் இரண்டு கருத்துக்கள் பாராட்டத்தக்கன. ஒன்று. மக்கள் சைவ வாழ்க்கை வாழவேண்டும் என்பது, ஒருவர் வாழும் வாழ்க்கை, வீடு, அலுவலகம், பொது இடம் எங்கும், இவர் ஒரு சிறப்பான சைவர் என்று சுட்டிக்காட்டுமாறு அமைய வேண்டும் என்ருர். மற்றது சைவர் செயலிலும் பிரசாரத்திலும் இறங்க வேண்டும் என்பது, சைவத்தின் சிறப்புக்களேப் பிற நாட்டினரும் நன்குணருமாறு சைவர்கள் செயல்பட வேண்டுமென்று அவர் சொன்ஞர். இரண்டும் சைவர் ஏற்றுக் கொள்ளத் தக்கன.

அன்றுமாலே நேரங் கடந்து நிகழ்ச்சிகள் நடைபெற்ற போதிலும் யாவும் சிறப்பாக நடைபெற்றன. முடிவான நிகழ்ச்சி வச்சிரவேல் முதலியாரவர்கள் உண்மை விளக்கம் பற்றியது. பேசியது அரைமணி நேரமாக இருப்பினும் கூட மிகவும் பொருளுடன் அழகாக உண்மை விளக்கத்தின் பொருளே அவர் கோவையாக எடுத்துரைத்தது மகாநாட்டிற்கே பெரும் சிறப்பு. அவர் பேச்சை ஒலிப்பதிவு செய்யாமையே பெருங்குறை. அவருடைய கருத்து விளக்கங்கள் சைவ உலகுக்கு இன்னும் அதிகமாகப் பயன்பட வேண்டும்.

இரு பெரியார் அறுபதாண்டு நிறைவு விழா

(மு. அ.)

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முன்ஞள் செயலாளராகிய திரு. சி, வடிவேல் பிள்ளையவர்களின் அறுபதாண்டு நிறைவு விழாவானது சென்னே கோடம்பாக்கம் புலியூரில் அவர்கள் இல்லத்தில் 20-10-68 தேதியன்று அடக்கமாக நடைபெற்றது. அவர்கள் சிதம்பரம் தாலுக்காவில் பிள்ளே

யார் தங்கல் என்ற ஊரினர். முறையாகக் கல்வி பயின்று பி. ஏ., எல். டி. என்ற தேர்வுகளும் பயிற்சியும் பட்டங்களும் பெற்று, கல்வித்துறையில் பல பதவிகள் வகித்து, சென்னையில் கல்வி அதிகாரி நிலையில் கல்வித்துறை இயக்குனரின் உதவியாளராக இருந்து ஒய்வு பெற்றுர்கள். வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். தெய்வ பக்தியும் இன்சொல்லும அடக்கமும் நல்லொழுக்கமும் மணக்கின்ற வாழ்க்கையுடையவர்கள். பல நிறுவனங்களோடு தொடர்பு கொண்டிருந்து, தம்மால் இயன்ற அளவு பிறருக்கு உதவி செய்து வந்தவர்கள். எக்காரியத்தையும் மிகவும் திருத்தமாகச் செய்யும் இயல்பினர். அவர்களுடைய கையெழுத்து இரு மொழிகளிலும், மிகவும் திருத்தமாக இருக்கும். வாழ்க்கையிலும், சொல்லிலும், நினைவிலும் பூரணமான தூய்மையுடையவர்கள். அத்தகைய தூயவர்கள் இன்று நம்மிடையே குறைந்து வருகிருர்கள். தம்முடைய உடல் நலக்குறைவால் அவர்கள் சமாஜத்தில் தொடர்ந்து செயலாளராகப் பணியாற்ற முடியவில்லை. எனினும், பணியாற்றிய காலத்தில், மெய்கண்டார் பிறப்பதற்குக் காரணமாயிருந்த தலமாகிய திருவெண்காடு என்னும் புண்ணியத் தலத்தில் சமாஜ 62ஆம் ஆண்டு விழாவை நடத்தி வைத்த பெருமை அவர்களுடையது.

சென்னையில் அவர்களுடைய அன்பர்கள் 17-11-68 அன்று ஒரு சிறப்பான பாராட்டுக் கூட்டம் நடத்தினர். எல்லாம் வல்ல இறைவன் அவருக்கும் அவர் மனைவியாருக்கும் பூரண ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும் பிற நன்மைகளும் தந்து காப்பாருக என்று அவனருளை வணங்கிப் பல்லாண்டு பல்லாண்டு என்று கூறி வாழ்த்துகிறேம்.

இன்று சைவசித்தாந்த மகா சமாஜத்தின் செயலாளராக இருக்கும் திரு. மு, நாராயணசாமி முதலியாரவர்களின் மணி விழா இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் 23-12-68 இல் மிகவும் சிறப்பாக நடந்தது.

சென்ற 35 ஆண்டுகளாக யாம் அவரை அறிவோம். அப்போது அவர் திரு. வி. கலியாண சுந்தரனுரின் சாது அச்சுக்கூடத்தில், திரு வி. உலகநாத முதலியாரின் கீழ் பணி புரிந்து வந்தார். சாதாரண அச்சுக்கோப்பாளராகத் தொழில் தொடங்கி சைவப் பெரியார் அனைவருடைய தொடர்பும் பெற்றுப் பக்குவம் நிரம்பியவர். சமாஜ வெளியீடுகள்

யாவும் திருத்தமாக வெளிவருவதில் இவருடைய பங்கு மிகவும் பெரிது. அமைதியாகவும் அடக்கமாகவும், திருத்தமாகவும் பணிபுரிவது இவருடைய இயல்பு. அச்சுக்கூடங்கள் இவ்வளவு அதிகமாகப் பெருகுவதற்கு முன்னமே திருத்தமான அச்சு என்றால் சாது அச்சகம் என்றே பலர் நினைவிலும் எழும். இவரே சாது அச்சுக்கூடமாயிருந்தார். திரு. வி. கலியாண சுந்தரனாரின் நூல்கள் பல பதிப்புக்களையும், சமாஜத் திருமுறைகள் தோத்திரங்கள் பல பதிப்புக்களையும் சி. கே. சுப்பிரமணிய முதலியார் பெரிய புராண உரையையும் தம் கையால் அச்சிட்ட பெருமை இவருக்கு உரியது. பல்லாண்டு பல்லாண்டு என்று வாழ்த்தி இறைவன் இவருக்கும் இவர் மனைவியாருக்கும் குடும்பத்தாருக்கும் எல்லா நலங்களும் அருளுமாறு பிரார்த்திக்கிறோம்.

பவன் எனும் நாமம்

பசு. பால. நடராசன்

இம்மைப் பிறவியில் ஏறக்குறைய எல்லோர்க்கும் துன்பம் நிறைந்த வாழ்க்கையாகவே இருக்கிறது. கடலினுள் சிக்கிக்கொண்டவன் ஒருவன் மீளவும் முடியவில்லை; அந்த நோத்திலேயே இறந்துபோய்த் தன்னை மறந்துவிடவும் முடியவில்லை. புறநானூற்றிலே இன்பதுன்ப நிலையைப் பெருஞ்சித்திரனர் 'கண்ணில்லாத ஊமன் ஒருவன் நடுக்கடலினுள் சிக்கிக்கொண்டான். வானம் கறுத்து இருக்கிறது. எங்கும் ஓரே இருள். மழையோ இடைவிடாது பெய்து படகினை நீரால் நிரப்பி மூழ்கடிக்கிறது. கடல் மிகவும் அச்சம் சான்ற சுழிகளை உடைத்து, கடற்சுழியில் படகு தத்தளிக்கிறது. கண்ணிலே ஒளியில்லை. அப்போது அவனுடைய மனநிலை எப்படியிருக்கும்?

"மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதின்
ஆரஞர் உற்ற நெஞ்சமொ டொராங்குக்
கண்ணில் ஊமன் கடற் பட்டாங்கு"

என்பது அப்பாட்டு அடிகள்,

அப்போது 'வாழ்ந்தால் நன்றாக வாழவேண்டும் இல்லையேல் இறந்துபடுவது நல்லது' என நினைக்கிறான். நல்வாழ்வு நமக்குக் கிடைக்காது என நினைந்து அதை நீக்குகிறான். 'அது கிடைக்காததினால் இறந்துபடுவது நல்லது; துன்பத்தின் அந்தத்தைக் கண்டுவிடலாம்; துன்பத்தைத் துய்க்கிறோம் என்ற மனத் துயர் இராது' என்று அவன் முடிவு செய்கிறான்.

முன்கூறிய இரண்டு முடிவுகளுமே மனிதனால் ஆக்கிக்கொள்ள முடியாதன. நல்வாழ்க்கை அடைவதோ அல்லது இறப்பை மேற்கொள்வதோ நமபிக்கையில் ஒன்றும் இல்லை. இறப்பை மேற்கொண்டவர்கள் உயர்ந்தவர்கள் என்றும் கூறுவதற்கு இல்லை. எப்படியும் 'விதியாகிய கைதவனின்' வலைக்குட்பட்டேதான் ஒருவன் வாழ்ந்து தீர வேண்டும். ஆகையினாலே பெறலரும் பிறவியைப் பெற்று இறைவனுக்கே ஆட்செய்யாது பிறபொருள்களை அவாவி நிற்றலான் துன்பம் வருகிறது. இறைவனுக்கே ஆட்செய்தால்தான் துன்பம் வாராவே.

''பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக்கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கேஇரை ஆகிக் கழிவரே''

என்கிறார் அப்பர் சுவாமிகள். ஆகவே தன்னைத் தொலைத்துக் கொள்ளாது இறைவனடியே சிந்திக்கப்பெற்றால் இம்மையும் செம்மை பெற்று மறுமையும் பெருமையுடையதாக இருக்கும் அல்லவா?

சமய வாழ்வை ஏற்று மேற்கொண்டு ஒழுகுபவனுடைய வாழ்க்கையே ஒரு அற்புதம். அவன் மாதவம் செய்தவனாகத்தான் இருக்கவேண்டும். இறைவனுடைய திருவுருவங்களைக் கண்ணாரக்கண்டு அந்த அற்புதமான இன்பத்தில் நீர்பனிக்கின்ற கண்ணும் சிவனையும் சிவனடியாரையும் கண்ட மாத்திரையிலே கூப்பித் தொழுகிற கைகளும் இறைவனுடைய திருவிளையாடல்களைச் சிந்திக்கிற மனமும்

உடைய ஒருவன் என்ன புண்ணியம் செய்திருப்பான்? அவன் அவ்வாறு இறைவனுடன் பாவித்துப் பழகுவதிலே எத்தனை மன நிம்மதியும் இன்பமும் அடைகிறான்.

இறந்து ஒப்பந்தவிடுவதைவிட இறைவனுடன் அன்பு கொண்டு வாழ்ந்தால் இன்பமும் அதிகம் அல்லவா? அதற்கு மனம் எனும் மாயக் குரங்கினைக் கட்டுப்படுத்த வேண்டாவா? பட்டினத்தடிகள் மனத்தை விளித்து (மனம் என்பது மனமாகிய புற அந்தக் கரணத்தை நீங்காது உடைய ஆன்மாவைக் குறிக்கும் உபசார வழக்கு) அறிவுரை கூறுகின்றார்.

"வினைபோகமே ஒருதேகங் கண்டாய்; வினைதான் ஒழிந்தால்
தினைப்போதளவும் நில்லாது கண்டாய்; சிவன் பாதம்நினை;
நினைப்போரை மேவு; நினையாரை நீங்கி இந்நெறியில் நின்றார்
உனைப்போல் ஒருவர் உண்டோ மனமே எனக்குற்றவரே"

என்னும்போது மனம் என்பதனை நெறிப்படுத்த 'பாதம் நினை, நினைப்போரை மேவு, நினையாரை நீங்கு' என்று கூறுகின்றார். இதே மாதிரி பல ஆசிரியர்களும் இறைவனுடைய திருவடியைச் சிந்திக்க ஒழுகலாறுகளையும் ஒழுகுவதற்குப் பற்றுக்கோடான சூக்கும மந்திரங்களையும் கூறிச் செல்கின்றனர்.

ஆளுடைய அரசு என்னும் தெய்வத் தொண்டர் நமக்கு ஓர் அற்புதமான பாடலைக் கூறுகின்றார். அந்த மந்திரம் அமைந்த பண்சான்ற பாடல்:

'சிவன் எனும் நாமம் தனக்கேவுடைய செம்மேனி அம்மான்
அவன் எனை ஆட்கொண்டளித்திடுமாகில் அவன்தனையான்
பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தால்
'இவன்எனைப் பன்னாள் அழைப்பொழியான்' என்று
எதிர்ப்படுமே"

இப்பாடலின் சுவையைச் சொல்லிட்டுச் சொல்ல முடியுமோ? அல்லது அதன் பெருமையை அலகிட்டு அளக்க முடியுமோ? நிறைமொழி மாந்தராகிய அப்பர் சுவாமிகள் ஆணையிற்கிளந்த மறைமொழியாகிய மந்திரம் அல்லவா?

அவனே எல்லா உயிர்க்கும் ஆதாரமாகியவன். எல்லோரையும் தாங்கி நிற்பவன். ஏழையாகிய என்னையும் தாங்கி அருளும் கடன் உள்ளவன். யானே அவனைத் தொழுவதற்கும அவனுடைய அருளினையே எதிர்பார்க்கும் இயல்பினன். அப்படியானால் என்னுடைய கடன் இறைவனுக்குப் பணிசெய்தலேயாம். மற்றெதவுமாகிய போகமோ, புகழோ பெறுதல் பணியில்லை. இறைவன் கழல் ஏத்துதல் அல்லது வேறு பணி எமக்கில்லை. என்னை ஆட்கொண்டு என்னுடைய பணிகளை ஏற்றுக்கொண்டு (ஏற்றலாகிய பேற்றை) அளித்திடுகிறான் இறைவன். அவ்வாறு அவன் எனை ஆட்கொண்டு அளித்திடவேண்டுமானால் அவன் தனை யான் பவன் எனும் நாமம் பிடித்துப் பல நாட்கள் இடைவிடாது சொல்ல வேண்டும். சொல்லுதலோடு பித்துப் பிடித்தாற்போன்று சிவானுபவ உன்மத்தராய்த் திரியவேண்டும்.

அவ்வாறு பவன் எனும் மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே திரிந்தால் இறைவன் இவ்வேழையேனையும் பார்ப்பான். ‘பல நாட்கள் இடைவிடாது சொல்கிறானே? (ஜபிக்கிறானே). இம்மந்திரத்தின் பெருமையறிந்து தன்னுடைய வாழ்க்கை உய்வதற்குரிய கொளுகொம்பெனப் பிடிக்கும் விடாத கொள்கையுடையவனோ?’ என்று பார்த்து இந்த மெய்த்தொண்டன் பல நாட்கள் நம்மை அழைப்பதை ஒழியான்; கொள்கையை விடான் என்று எதிர்ப்பட்டு அவனை ஆட்கொள்வான் அடியார்க்கு எளியானாகிய சிவபிரான்.

பவன் எனும் மந்திரச் சொல் தான்தோன்றியான ஒப்பில்லாத சிவனைக் குறிக்கும். அந்த சூக்குமச் சொல்லால்

அந்த ஒப்பிலியை ஆன்ம வளர்ச்சிக்குத் துணையாகக் கொண்டு அரற்ற வேண்டும். அவனை நினைக்கையில் ஆனந்தத்தால் ஆடவேண்டும். கூத்துடையான் கழற்கு அன்பு செய்ய வேண்டும். என்புருகுமாறு பண்ணோடு பதிகம் பாடவேண்டும். வேடர் தலைவர் திண்ணப்பரைப் போன்று இறைவனுடைய நன்மை தீமைகளைக் கவனித்த வாறு, தீது என உணர்ந்தழிப் பதைபதைக்க வேண்டும். இறைபடியாரையும் இறைவனையுங் கண்டுழிப் பணிய வேண்டும். இறைவனது திருவடிகளிலே சூட்டப் பட்ட மலரினைக் கண்களில் ஒத்தித் தலைக்கணிந்து கொள்ள வேண்டும். இறைவனுக்குப் பூச்சாத்தி அவர் தம் பேரழகினைத் துய்க்க வேண்டும். 'இறைவன் எங்கிருக்கிறான்?' "அப்பாலைக்கு அப்பாலான்" என்கிறாரே அப்பர். அவன் அப்பாலைக்கு அப்பால் எங்கிருக்கிறான்? சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து என்கிறார்களே! சிந்தையும் மொழியும் செல்லாவிடத்தில் சென்றால் எங்கிருக்கிறான்? என்று சென்று தேடவேண்டும். தெருவு தோறும் பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து அலைய வேண்டும். அப்படியெல்லாம் செய்பவர்க்குத்-தன் நாமம் மறந்துதலைப் பட்டார்க்கு இறைவன் ஆட்கொண்டு அளிக்காது என் செய்வான்?

(தொடரும்)

தமிழக முதன்மந்திரி மறைவு

ஆசிரியர்

தமிழக முதன் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை 2-2-69 ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு 12-22 மணிக்கு இவ்வுலக வாழ்வை நீத்தார் என்ற செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தொண்டையில் உணவுக் குழாயில் ஏற்பட்ட புற்று நோய்க்காக அமெரிக்கா சென்று டாக்டர் மில்லர் என்ற நிபுணரிடம் 1968 செப்டம்பர் மாதம் அறுவை வைத்தியம் செய்து

கொண்டார். இந்தியா திரும்பிவந்து தம் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்த காலத்தில், மீண்டும் அவருக்கு நலக்குறைவு ஏற்பட்டது. ஜனவரி மாதம் 20 ஆம்தேதி மீண்டும் அவர் அடையாறு புற்றுநோய் மருத்துவ சாலைக்குப் போய்த் தங்கி வைத்தியம் செய்து கொண்டார். டாக்டர் மில்லர் போன்ற நிபுணர் பலர் பார்த்தும்கூடக் குணமடையாமல் பிரக்ஞையற்ற நிலையில் சில நாள் இருந்து காலமானார்.

திரு அண்ணாதுரை 1909 இல் காஞ்சியில் பிறந்து பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. பட்டம் பெற்று முதலில் கொஞ்ச காலம் கோவிந்து நாயக்கர் நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராக வேலைபார்த்துப் பின் அரசியலில் புகுந்தார். ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து, பல பொறுப்புக்களை ஏற்றுப் பின் திரு இராமசாமி நாயக்கருடன் சுயமரியாதை இயக்கத்தில் பெரும் பங்குகொண்டு, அவருடைய திராவிடக் கழகத்தில் அவருக்கடுத்த பெருந்தலைவராக விளங்கி. கட்சிப் பத்திரிகைகள் பல நடத்தி வந்தார். 1949இல் நாயக்கர் தம் 72 ஆம் வயதில் 28 வயதுப் பெண்ணை மணந்தபோது, அதைக் கண்டித்து, அக்கட்சியை விட்டு விலகி, திராவிட முன்னேற்றக் கட்சி என்ற புதுக் கட்சியைத் தொடங்கினர் தனித்திராவிட நாடு வேண்டுமென்றே கிளர்ச்சி செய்து வந்த இவர் இந்தியா மீது சீன படையெடுத்தபோது, இந்திய ஒருமைப்பாடு இருந்தாலொழிய இந்தியாவின் எந்தப் பகுதியும் ஆபத்திலிருந்து தப்ப முடியாது என்பதை உணர்ந்து, அக் கிளர்ச்சியையும் கொள்கையையும் கைவிட்டார். இவருடைய தனி முயற்சியால், 1952 இல் ஓரிடமும், 1957 இல் 15 இடமும், 1962 இல் 50 இடமும் பெற்றிருந்த இவருடைய கட்சி, 1967 தேர்தலில் 138 இடம் பெற்று, அதுவரை விடாமல் ஆட்சி செய்து வந்த காங்கிரசை அடியோடு முறியடித்து, மந்திரிசபை அமைத்தது. அவர் ஆட்சியின் முக்கியச் சிறப்பு, தமிழ்நாட்டுக் கல்வியில்

இந்தியை அறவே நீக்கி, தமிழ் ஆங்கிலம் என்னும் இரண்டுக்குமே இடங்கொடுத்ததாகும்.

இந்தியாவில் 1967 தேர்தலின்பின் ஏற்பட்ட புதிய ராஜ்ய மந்திரிசபைகளில், இவருடைய மந்திரிசபை ஒன்றே மாறுதலின்றி உறுதியாக நிலைத்திருந்தது. அன்றியும், மத்திய அரசு காங்கிரஸ் அரசாயிருந்தும் அதனோடு பூசலின்றி நன்முறையில் ஒத்தியங்கியதும் இம்மந்திரி சபையேயாகும். இதனால் தமிழ் நாட்டுக்கு மிக்க நன்மை என்பது நன்கு விளங்கும்.

அரசியல் துறையில் இவர் எல்லோருடைய பாராட்டையும் பெற்றிருக்கிறார். இராஜாஜி அவரை மிக்க அன்போடு போற்றி வந்தது அனைவரும் அறிந்தது. இவருடைய சிறப்பான பண்பு, நிதானத்தோடு கூடிய அறிவும், ஏழைபால் இரக்கமுமாகும். பேச்சிலும் எழுத்திலும் இவர் தமக்கென்று ஒரு தனி நடையைப் படைத்துக் கொண்டிருந்தார். எப்போதுமே எதையும் சீர்திருத்த வேண்டுமென்ற ஒரே எண்ணம் இவருக்கு மேலோங்கி நின்றது. ஜனநாயகத்தில் நம்பிக்கையும் சமூகத்தைத் திருத்தி மேம்படுத்த வேண்டும் தமிழனை உலகத்தில் ஓங்க வேண்டும் என்ற எண்ணமுமே இவரை ஆட்டி வைத்த பெருஞ் சக்திகள். இவை காரணமாக இவருக்கு இளமையிலிருந்தே சடங்குகளிலும் ஆசாரங்களிலும் நம்பிக்கையில்லாது போயிற்று. ஆனால் சென்ற ஆண்டில் ஒரு சமயம் இவர் திருத்தணிகை முருகன் சந்நிதியில் கூப்பிய கையோடு மெய்ம்மறந்து சில நிமிட நேரம் நின்றார் என்ற செய்தியைப் படித்தவர்கள், இவர் ஆலயங்களுக்கு விரோதி என்று சொல்லத் துணியமாட்டார்கள்.

யாரையும் இவர் அலட்சியம் செய்ததில்லை. பகைவரையும் அன்புடன் நடத்திவந்தார். மேலும் படிப்பில் ஆர்வமுள்ளவர். எந்த நேரமும் படித்துக்கொண்டே இருப்பார்.

இத்தகைய ஒரு தலைவர் தோன்றுவது அருமை என்று எல்லோரும் ஒருமித்துக் கூறியிருக்கிறார்கள். இவரது ஆட்சிக்காலத்தில் தமிழ்மக்கள் அதிகம் எதிர் பார்த்தார்கள். ஆனால் கடவுள் சித்தம் வேறுவிதமா யிருந்தது. பதவியின் இரண்டாண்டு முடிவதற்குள் அவர் காலமாகி விட்டார். இவருக்குப்பின் இருப்போர் பொறுப்பு மிகவும் பெரிதாகிறது.

இவருடைய ஆன்மா சாந்திபெற இறைவன் அருள் புரிவானாக.

பாண்டி நாட்டு நள்ளாறு

(நா. த. முத்து)

நற்றமிழ் வழங்கும் நம் திருநாட்டின்கண்ணே வடக்கி லிருந்து வந்து பரவிய வேற்றுச் சமய நெறிகளில் மக்கள் மயங்கி இடர்ப்பட்ட காலை, இயற்கையாக இருந்த சைவசமயத் துத் தோன்றிய அருட் பெரியார்கள் மக்களை அவற்றிலிருந்து மீட்க தமிழகம் யாங்கணும் இடம்விடாது சென்று இசை கலந்த செந்தமிழ் வாரப பாக்களைப் பாடி, பட்டி மன்றம ஏறி சமய வாதங்கள் செய்து வெற்றிகண்டு சைவத்தை நிலை நாட்டினமையை அறிவோம். அவர்தம இறைமைத்தன்மை வாய்ந்த பாக்களை நம் முன்னோர்கள் முறைப்படுத்தி திருமுறை களாக வைத்துள்ளனர். மூவர் தேவாரமும் பெற்ற பெருமை யுடைய பதிகளில் ஒன்று திருநள்ளாறு என்பது.

இத்திருநள்ளாறு பாண்டி நாட்டு மதுரைமா நகரத்தின் கண் உள்ளதாகக் கல்லாடர் என்ற முதுபெரும் புலவரால் அவர்தம் கல்லாடத்தில் குறிப்பிடப்படுகிறது.

....

.... வடதிரு ஆலவாய், திருநடுவூர், 22
வெள்ளியம்பலம், நள்ளாறு இந்திரை,
பஞ்சவனீச்சரம், அஞ்செழுத்தமைந்த
சென்னிமாபுரம், சேரன் திருத்தளி
கன்னி செங்கோட்டம், கரியோன் திருவுறை,

....
....
அருவியஞ்சாரல் ஒருபரங்குன்றம் 32
சூழ்கொள இருந்த கூடலெம் பெருமான்
.... (கல்லாடம் 59)

வடதிரு ஆலவாய், திருநடுவூர், வெள்ளியம்பலம், சென்னிமா புரம், (சோழவந்தான்) கரியோன் திருவுறை, (கூடலழகர் கோயில் அல்லது திருமாலிருஞ்சோலைமலை) பரங்குன்றம் என்பன இன்றும் உள்ளன.

வடதிரு ஆலவாய், இந்திரை, கன்னி செங்கோட்டம், வெள்ளியம்பலம், நடுவூர் என்பன பெரும் பெற்றப் புலியூர் நம்பி திருவிளையாடற் புராணத்தில் குறிப்பிடப்படுகின்றன.

கலித்தொகை, சிலப்பதிகாரம் என்ற சங்க நூற்களில் குறிக்கப்படும் ''நான் மாடக் கூடல்' என்றதற்கு நச்சினார்க்கினியர் என்ற உரையாசிரியர் தமது கலித்தொகை உரையில் (92ஆம் பாடல்) திருஆலவாய், நள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் என்பனவற்றை நான்கு மாடங்களாகக் குறிக்கிறார்.

தேவாரம் பாடப்பெற்ற நள்ளாறும் மதுரைக்கு அருகுள்ளதேயாகும் என்பது தேவாரப் பாடல்களாலேயே தெரியவருகிறது; அக்கருத்துகளைக் காண்போம்.

தேவாரத்தில் இரண்டு பதிகளைச் சேர்த்துப் பாடிய பதிகங்கள் உண்டு; ''திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்'' ''திருத்துருத்தியும் வேள்விக்குடியும்'' ''திருப்புன்கூரும் திருநீடூரும்'', ''திருவலஞ்சுழியும் கொட்டையூர் கோடீச்சரமும்'' என்பனவற்றைக் காண்க. இவ்விரட்டைப்பதிகள் அடுத்தடுத்துள்ளது காணலாம். இவ்வாறு அடுத்கடுத்து உள்ள கருத்தினை மனங்கொண்டு ''திருநள்ளாறும் திருஆலவாயும்'' என்ற பதிகத்தை நோக்குங்கால் திருநள்ளாறு ஆலவாய்க்கு அருகுள்ளது என்பது தெரியவருகிறது. இஃதே நாம் மேலே கண்டது.

மேலும் திருஞானசம்பந்தர் மதுரையில் கூன்பாண்டியனை நின்றசீர் நெடுமாறனின் வெப்பு நோயைத் தீர்த்து சமணருடன் அனல்வாதம் புனல்வாதம் முதலியவை செய்து வெற்றிகண்டு சைவத்தை நிலைநாட்டி நம்மை உய்வித்தமை அறிவோம். அனல்வாதத்திற்கு அவர் இட்டது திருநள்ளாற்

றுப் பதிகமாகும். ஆக வாதம் நடந்த இடம் மதுரையில் இருந்த நள்ளாறு போலும். ''தளரிளவளரொளி'' என்ற திரு நள்ளாற்றுப் பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் ''எரியினில் இடில் இவை பழுதிலை எம்மையே'' என்ற குறிப்பு அகச்சான் ருகக் காணப்படுதலாலும், கடைக்காப்புப் பாடலில் ''கொற்றவ னெதிரிடை எரியில் இட இவைகூறிய'' என்ற அடிகள் தெளி வாக எரியினில் இடுவதற்காகப் பாடப்பட்டதாகக் கூறுவதனு னும் இஃது பச்சைப்பதிகம் போலும். அதான்று இப்பதிகப் பாடலில் ''குலவலின்'' ''துதைதலின்'' ''புணாதலின்'' என்ற சொற்கள் நேரில் கண்டவற்றைப் பாடுவதாகக் காட்டுகிறது. ஆனுல் சேக்கிழார் பெருமான் மதுரையினின்று நினைந்து பாடியதாகக் கூறுகிருர்.

சேக்கிழார் காலத்தில் மதுரையில் இருந்த நள்ளாறு வழக்கிழந்து மறைந்துபட்டது போலும். எனவேதான் சேக்கி ழார் அவர் காலத்தில் இருந்த சோழ நாட்டு நள்ளாற்றினைக் கொண்டு, நள்ளாற்றுப் பதிகமே எரியினிலிட்டதற்கு அகச் சான்றுடன், வரலாறுடன் திகழ்வதால் அதற்கு ஒட்டிச் செல்ல ஓலைச்சுவடிகளில் கயிறு சாற்றிய கருத்துச் சிறப்புற வைக்கப்பட்டதுபோலும். அதான்று, ''தளரிளவளரொளி'' என்ற பதிகத்தையே பச்சைப் பதிகமாகக் காட்டாது ''போக மார்த்த பூண்முலையாள்'' என்ற பதிகத்தைக் காட்டினமை யாதெனின், அப்பதிகம் முதலிரண்டு அடிகளில் உமையம் மையின் தனத்தை வருணித்துப் பாடி, தொண்ணூற்று ஆறு வகை சிறு நூல்களில் ஒன்ருன ''பயோதரப்பத்''திற்கு 1 மேற் கோளாக இருத்தலான் அதன் தூய்மையையும் சிறப்பை யும் பற்றிக் காட்டி சாதாரண மக்கள் கொள்ளக்கூடிய தவ ருன கருத்தை மனத்தின் நீக்கவே போலும்,

திருமுறைகள் பண்முறையாக வகுக்கப்பட்டமை அறி வோம். ஒரு பண்ணின்பாற்படும் பதிகங்கள் முறையாக அஃதாவது அடுத்தடுத்து உள்ள தலப் பதிகங்கள் அடுத் தடுத்து வைக்கப்பட்ட முறை அப்பரது 4, 5, 6 ஆம் திருமுறை யில் மட்டுமே காணப்படுகின்றது. திருவையாறும அதற்கடுத்

1. ''தந்துரைத்த மன்விருத்தம சார்ந்த கலித்துறைதான்
அந்தமுறும் கண்முலைமேல் ஐயிரண்டாய் வந்தால்
நயனப் பயோதரப்பத் தாம்என்று நன்னூற்
பயனுரைத்தார் முன்பு பகர்.'' —வச்சணந்திமாலை

துள்ள ஆறுதிருவூர்களின் (சப்த ஸ்தான தலங்கள்) பதிகங்களும், ஒரு தொகுதியாகக் கடைசியில் உள்ள முறைகளை நோக்க அறியலாம் இக்கருத்தினை மனத்தில் வைத்து அப்பரது திருநள்ளாற்றுத் தாண்டகப் பதிகம் பூவணம், ஆலவாய் என்ற முறைக்கு அடுத்து இருப்பதாற்றன் நள்ளாறு ஆலவாய்க்கு அருகுள்ளது என்பது மேலும் தெளிவாகும்.

''ஏடுமலிகொன்றை'' என்ற சம்பந்தரது திருநள்ளாற்றுப் பதிகப் பாடல்கள் காண்க.

''கடுத்துவல் லரக்கன்முன் நெருக்கியவரை தன்னை
எடுத்தவன் முடித்தலைகள் பத்தும்மிகு தோளும்
அடர்த்தவர் தமக்கிடம தென்பரளி பாட
நடத்தகல வைத்திரள்கள் வைகியநள் ளாறே''

(8ம் பாடல்)

இதனில் காணப்படும் ''தென்பரளி'' ஓர் ஆறு ஆகும். இதனை ''கலவைத் திரள்கள் வைகிய'' என்ற அடிப்பகுதி தெளிவாக்குகிறது. கலவை-மீன்வகை, 2. 190 பதிகள் 355 பதிகங்களில் பாடப்பெற்ற சோணாட்டின்கண் உள்ளதாக யாங்கணும் குறிக்கப்படவில்லை. அப்பெயரில் உள்ள ''தென்'' என்ற அடையே தமிழகத்திற்குத் தெற்காக உள்ள நாட்டினைக் குறிக்கும். இன்றும் பாண்டி நாட்டிலும், கொங்கு நாட்டிலும் பரளியாறு என்ற பெயர் காணப்படுகின்றன.

மேலும் ''நீர்க்குடமெடுத்து மறையாளர் நாவின் வழி நின்று தொழில் பேணிய நள்ளாறே'', ''வேதியர்கள் வேள்வியொழியாது மறைநாளும் ஓதி அரநாமமுணர் திருநள்ளாறே', 'வேத ஒலியார்......நள்ளாறே'' என்ற அடிகள் வேதியர்கள் இடைவிடாது பெருங்கூட்டமாக இருந்து வேள்விகளை நடத்தியதைக் குறிக்கின்றன. இவ்வேள்விகளுக்காகப் பெருஞ் செல்வர்களையே எப்பொழுதும் நம்பிவாழும் இயல்பினை உடையவர்கள் வேதியர்கள். அவர்கள் செல்வர்கள், வணிகர், அரசர், அவர் குடும்பத்தினர் வாழும் மாநகரமான மதுரைக்கு

---

2. ''அவைப்புமாண் அரிசி அமலைவெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவிர்''
சிறுபாண். 194-195
''வலவைகள் அல்லாதார் கால்ஆறு சென்று
கலவைகள் உண்டு சழிப்பர்'' —நாலடியார் 248

அருகுள்ள நள்ளாற்றில் இருந்திருப்பது மிகப்பொருத்தமான தோன்றும்,

அதான்று "நளன்" வழிபட்டதாகக் குறிப்பிடுவது சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டம் ஊர்காண் காதையில் கவுந்தி அடிகள் கோவலனுக்கு ஊழ்வினைபற்றிய கதைகளைச் சொல்லுங்கால் நளனது கதையைக் கூறுவதுமூலமும் ஓர் ஒற்றுமையைக் காட்டுகிறது.

இக்கருத்துக்களை ஒருசேரக் கருத்திற்கொண்டு முடிபு செய்யுங்கால் திருநள்ளாறு என்ற தேவாரப் பாடல் பெற்ற தலம மதுரைக்கு அருகு இருந்தது என்பதாகும். ஆனால் இன்று காணக் கிடப்பதன்று. இத்தலம் எங்குள்ளது என்று ஆய்வது நலம்.

மதுரையில் உள்ள மதனகோபாலஸ்வாமி கோயில் கல்வெட்டுகள் 3 அதனைத் "திருத்துருத்தி" என்று குறிப்பதாலும் கூடலழகர் கோயில் கல்வெட்டொன்று 4 "நந்திகேஸ்வரச் சந்தான பரம்பரையில் வந்த ஞானமூர்த்தி தேவர் என்பார் அமுத மடம் என்றதில் இருந்தும் அதற்கான நிலம்விட்ட நிவந்தமும் மணம் பேரையன் மடம் என்பவற்றைக் குறிப்பதானும் அவை ஓர் காலத்தில் சிவன் கோயிலாக இருந்திருக்கக் கூடும் என்று எண்ண இடம் தருகின்றது. காஞ்சன மாலை கோயில் என்று கூறப்படும் ஜலகண்டேஸ்வரர் கோயில் மிகப் பழமையானதாகக் குறிப்பிடப்படுதலாலும் 5 இஃதும் மேல் கூறப்பட்ட கோயில்களும் கல்லாடர் குறித்ததுபோன்று, பஞ்சவனீச்சரம், சேரன் திருத்தளி, நள்ளாறு என்பன போன்ற கோயில்களாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இவை ஆய்தலுக்குரியன. பெரியோர்கள் மனங்கொண்டு ஆய்தல் நலம் எல்லாம்வல்ல நள்ளாறர் ஊக்குவிப்பாராக. திருச்சிற்றம்பலம்.

குறிப்பு:—

ஆலவாய்ப் பதிகங்கள் திருவிருக்குக் குறள், யமகம், நாலடி மேல் வைப்பு என்ற பலவகைப் பாடல்களில் பாடப்பட்டிருப்பது ஈண்டு ஒத்து நோக்கத்தக்கது.

3, 502-511/1907, 203/1935–36
Madras Epigraphical Reports

4. 560/1911 do

5, திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்.
திரு. உ. வே. சா. பதிப்பு. பக்கம் 384.

சைவ சித்தாந்த மகா சமாஜ 63ஆம் மாநாடு
வரவு செலவுக் கணக்கு

வரவு	ரூ.	பைசா
மாநாட்டு மலருக்காக வரவு	2040	00
நன்கொடை வரவு	1810	00
உணவு வரவு (உறுப்பினரல்லார் மூலம்)	25	00
மலர், நூல்கள் விற்ற வரவு	193	00
ஆக வரவு	4068	00

செலவு	ரூ.	பைசா
மலர் அச்சுச் செலவு	1040	30
அட்டை ஆர்ட்தாள்	39	28
கற்பகாம்பாள் மண்டபம் 3 நாள் வாடகை	150	00
do மின் கட்டணம்	77	75
தெற்கு மாடவீதி சத்திர 3 நாள் வாடகை	100	00
do மின் கட்டணம்	35	50
அங்கம் பூம்பாவை நாடகச் செலவு	150	00
தேவார ஓதுவார்களுக்குச் செலவு	96	75
நடித்த குழந்தைகளுக்குப் பரிசு	32	85
சொற்பொழிவாளர்களுக்கு	185	00
உண்டிச் செலவு	1321	57
அரிசி	100	00
ரவை, மைதா, ஆட்டாமாவு	150	00
தபால் செலவு	60	00
வேலையாட்கள் கூலி, சாமான் வாடகை, பிற செலவுகள்	50	00
போக்குவரத்துச் செலவு	100	00

அச்சுச் செலவு	47	00
சோடா, மண்டபம் ஒழுங்கு படுத்துதல் ஆதியன	42	00
பூ, மாலை, வழிபாட்டுச் செலவு	110	00
பந்தல், வாழைமரம் முதலியன	50	00
மலர் அட்டை, பாட்ஜ் செலவு	60	00
சுவரொட்டிச் செலவு	60	00
சமாஜத்துக்குக் கொடுத்த வகையில் செலவு	10	00
	4068	00

1. மலருக்காக இன்னும் வரவேண்டிய ரூ. 50 (ஐம்பது மட்டும்) ஆங்கில சைவ சித்தாந்தா வுக்குக் கொடுக்கப் பெறும்.

2. மேற்கண்ட வரவு செலவுக் கணக்கு 2-2-69 அன்று நடைபெற்ற சமாஜச் செயற் குழுக் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பெற்றது.

பி. எம். நாயஞர்

செயலாளர் & பொருளாளர்

மாநாட்டு வரவேற்புக் குழு.

நன்கொடைப் பட்டியல்	ரூ.	பை.
1. தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம்	101	00
2. ஸ்ரீ திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி அடிகளார்	75	00
3. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள்	25	00
4. பேரூர் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் மடம் இராமசாமி அடிகளார்	25	00

5.	சரவணபுரம் கௌமார மடாலயம் ஸ்ரீ சுந்தர அடிகளார்	25	00
6.	திரு A. சிவ சைலம் அவர்கள் தொழில் அதிபர், சென்னை	200	00
7.	திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார், மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ கபாலீஸ்வரர் கோவில், மயிலாப்பூர்	160	00
8.	திரு. மருதப் பிள்ளை Century Mills, Madras	150	00
9.	திரு N. மகாலிங்கம் அவர்கள், சென்னை	101	00
10.	திரு. R. மாசிலாமணி முதலியார், மேயர் கம்பெனி, சென்னை	101	00
11.	திரு. வைத்திசுப்பிரமணிய அய்யர், மயிலாப்பூர்	100	00
12.	திரு. இரத்தினவேல் செட்டியார் இராயபுரம், சென்னை	100	00
13.	திரு. கோ. முத்துசாமிப் பிள்ளை (IAS) ஓய்வு, தலைவர், சைவ சித்தாந்த சமாஜம்.	60	00
14.	திரு. P. G நடராஜ முதலியார், அதிபர், Parker press	60	00
15.	திரு. A. S. மாணிக்கம் & கோ paint வியாபாரம், சென்னை-3	60	00
16	திரு. N. T. கிருஷ்ணசாமி முதலியார், பொருளாளர், சைவ சித்தாந்த சமாஜம்.	55	00
17.	திரு. திண்டுக்கல் சுந்தரம் பிள்ளை, ஏகாம்பரம் முதலியார் & சுந்தரம் பிள்ளை சென்னை-1	51	00
18.	திரு. P. K. நடராஜன், Engineering contractor	51	00

19.	திரு. M. C. S. இரத்தின சபாபதி செட்டியார், கும்பகோணம்	50	00
20	திரு. நாகராஜன் பேரில் ஓர் அன்பர்	50	00
21.	திரு. சுப்பிரமணியஞ் செட்டியார் சம்பந்தன் செட்டியார், மயிலாப்பூர்	30	00
22.	இரத்தினம் பிரஸ், பத்திரியன் தெரு, சென்னை-1.	30	00
23.	திரு. A. P. கோவிந்தராஜ் பிள்ளை, நாகதேவம் பாளையம், கோபி செட்டிபாளையம்	25	00
24.	திரு. நாகையா பிள்ளை & Sons, கோபி செட்டி பாளையம்	25	00
25.	திரு. P. S. N. M. இராமலிங்க செட்டியார், சென்னை-1.	25	00
26.	திரு. கமலக்கண்ண முதலியார்	25	00
27.	திரு. C. N. சிங்காரவேல் முதலியார்	25	00
28.	திரு. மு. நாராயணசாமி முதலியார்	15	00
29.	திரு. பம்மல். வரதராஜ முதலியார்	10	00
		1810	00

பி எம். நாயனுர்

செயலராளர் & பொருளாளர்

மாநாட்டு வரவேற்புக் குழு.

மதிப்புரை

"குமரகுருபரன்" இருபதாம் ஆண்டு மலர் வரப்பெற்றோம். இஃது அருள்திரு காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அருளால் நன்கு தமிழகத்திற்கும் சைவ உலகிற்கும் தொண்டாற்றி வருகின்றது. இம்மலரில் 4 ஆங்கிலக் கட்டுரைகளும் 18 தமிழ்க் கட்டுரைகளும் வெளி வந்துள்ளன. அவையாவும் நம் தமிழையும் சைவ சித்தாந்தத் திறனையும் போற்றுந்தகையன எனச் சுருங்கக் கூறலாம், திருமுருக கிருபானந்தவாரியார், டாக்டர் திரு. பா. நடராசன், அருள்திரு தத்புருஷ தேசிகர், திரு. வை. சுந்தரேச வாண்டை யார், வித்துவான் சி. அருணை வடிவேலு முதலியார், திரு. பி. முத்தரசு முதலிய பல பெருமக்களின் சிறந்த கட்டுரைகள் இம்மலரில் இடம் பெற்றுள்ளன. இது 96 பக்கங்களைக் கொண்டுள்ளது. இத்திங்களிதழை யாவரும் வாங்கிப் படித் துச் சமய அறிவும் தமிழறிவும் மேம்பட்டுத் திகழ்வார்களாக. வருடச் சந்தா ரூ. 3-00. வேண்டுவோர் ஆசிரியர், "குமர குருபரன்" ஸ்ரீ வைகுண்டம். திருநெல்வேலி மாவட்டம் என் னும் முகவரிக்கு எழுதி இவ்விதழை வரவழைத்துக்கொண்டு பயன்பெற வேண்டுகின்றோம். (அம்பை)

பிறசெய்திகள்

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையின் சார்பில் 12-1-1969 அன்று சபைக் கட்டிடத்தில் திரு M. காசி விசுவநாத பிள்ளை எம். ஏ. அவர்கள் தலைமையில் பாவைப் போட்டிப் பரிசளிப்பு விழா நடைபெற்றது. திருமதி சரசுவதி அம்மாள் அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள்.

12-1-1969-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்குச் சிவப்பிரகாசர் செந்தமிழ்ச் சங்கத்தின் சார்பில் கும்பகோணம் நகராட்சி உயர்நிலைப் பள்ளிதலைமை ஆசிரியர் சிவநெறிச் செல்வர் திரு. எஸ். சுந்தரேசன் செட்டியார் எல்.டி பி. எல்., அவர்கள் தலைமையில் ஸ்ரீ ஜகத்குரு சாந்ததேவ, சாரங்க தேசிகேந்திர சுவாமிகள் மகாசந்நிதானம் அவர்கள் துவக்கஉரை நிகழ்த்தினார்கள். தலைவர் முன்னுரைக்குப்பின் குடந்தை பண்ணாராய்ச்சி வித்தகர் திரு. ப. சுந்தரேசம் பிள்ளை அவர்கள் "திருவாசகம்" என்னும் பொருள்பற்றிச் சொற் பொழிவு நிகழ்த்தினார்கள். இந்த நிகழ்ச்சிக்குக் கும்பகோணம் அன்பர் ஜி. பக்கிரியா பிள்ளை அவர்கள் ஞாபகார்த்தமாக பொருளுதவிய அன்னார் குமாரர்களுக்கு நன்றி தெரிவித்து இறைவணக்கத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

மாசித்திங்கள் சிறப்பு நாள்கள்

6. (17-2-69) சதயம்-கோச்செங்கோட் சோழ நாயனுர் விழா
23 (6-3-69) அத்தம்-எறிபத்த நாயனுர் விழா
30 (13-3-69) பூராடம்-காரி நாயனுர் விழா

பிறசெய்திகள்

புன்செய்ப் புளியம்பட்டி அருள்நெறி மன்றத்தின் சார்பில் 17-1-'69 மாலை திரு. பழ. முருகேசன் பி. இ. அவர்கள் தலைமையில் ஈரோடு திருமுறைக் கழகத் தலைவர் திரு. இரா. ப. தங்கவேலு அவர்கள் "தெய்வந் தேடினும் இல்லை" என்பது பற்றிச் சொற்பெருக்காற்றினுர்கள். பாவைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கும் பரிசு வழங்கப்பெற்றது.

புரசைத் திருநெறிக் கழகச் சார்பில் 9-2-69 அன்று புரசை வேம்படி விநாயகர் கோயிலில் ஸ்ரீ காசிமடம் திருச்சி திரு. சோ. முத்துக் கந்தசாமி தேசிகர் அவர்கள் திருமுறை ஓத திருமுறை விழா இனிது நிகழ்ந்தது.

நம் சமாஜத் துணைச் செயலாளர் திரு. M. சிவராமன் பி. ஏ. அவர்கள் திருமகளார் செல்வி வசந்தா பி. ஏ., பி. டி. அவர்களுக்கும் திருவளர் செல்வர் T. R. சரவண பவன் பி. இ. (ஹானர்ஸ்) எ. எம். ஐ. ஐ. இ. அவர்களுக்கும் திருமணம் 29-1-69 காலை திருமயிலை தோ பா சுவாமி திருக்கல்யாணக் கூடத்தில் சிறப்புற நிகழ்ந்தது. சமாஜச் சார்பில் வாழ்த்திதழ் வாசித்துக் கொடுக்கப் பெற்றது.

நிறைநாட் செல்வர் சரவண பவன் அவர்களும் நிறைநாட் செல்வி வசந்தா அவர்களும் ஒன்று கெழுகொள்கையினராய் இல்லறமென்னும் நல்லறத்தை இனிதேயேற்று எல்லா நற்பேறுகளையும் பெற்று இந்நீணிலத்து நீடு வாழ எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவடிகளை அருள்பாலிக்குமாறு வணங்கி வாழ்த்துகின்றோம்.

நம் சமாஜப் பேரன்பரும் பூர்வாசிரமத்தில் சிவக்கவிமணி C K. சுப்பிரமணிய முதலியார் என்ற பெயரில் விளக்கமாக அறியப்பட்டவர்களுமான, தவத்திரு. சம்பந்த சரணுலயத் தம்பிரான் சுவாமிகளின் எட்டாவது ஆண்டு குருபூசை விழா கோயம்புத்தூரை அடுத்த திருப்பேரூரில் சுவாமிகளின் சமாதி மண்டபத்தில் 26-1-69 தேதி ஞாயிற்றுக் கிழமை சிறப்புடன் நடைபெற்றது

அன்று காலை 10 மணி அளவில் திருமுறைச் செல்வர் வித்துவான் S. அருணாசலம் பிள்ளை அவர்கள் குழுவினரின் தேவார இன்னிசையுடன் மகாபிஷேகம் தொடங்கப் பெற்றது. நமது சமாஜத் தலைவர் வித்துவான் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, I A. S (Rtd) அவர்கள் விழா நிகழ்ச்சிகளுக்குத்

தலைமை வகித்து தமது இளமைக் காலத்தில் சுவாமிகளுடன் கொண்டிருந்த தொடர்பு குறித்துப் பேசினார்கள். பின்னர் பெருஞ்சொற்கொண்டல் புரிசை சு. முருகேச முதலியார் அவர்கள் பொருளியலுடன் அருளியலும் இணைந்து வாழவேண்டிய பூரண வாழ்வு பற்றி ஒரு சிறப்புரை ஆற்றினார்கள். இவ்விதமே இதனை திருவள்ளுவர் காலத்துக்குப் பின் இதுவரையில் வெளிப்படையாக எடுத்துக்கூறிய பெருமை திரு. முதலியார் அவர்களுக்கே உரித்தென்று தலைவர் முதலியோர் பாராட்டினர். இலக்கண நிறைகடல் பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள், நமது சமாஜப் பேரன்பர்களான திரு. நல். முருகேச முதலியார் B. A, திரு. மு. நாராயணசாமி முதலியார், அந்தணப் பேட்டை திரு, N. R. நாராயணசாமித் தேவர் போன்றோர் பலர் ஆசிச் செய்திகள் அனுப்பி இருந்தார்கள்.

நண்பகல் மாகேசுவர பூசையுடன் குருபூசை விழா இனிது நிறைவேறியது.

குறிப்பு :

குருபூசையின்போது விடுத்த வேண்டுகோளுக்கிணங்க மூவர் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் உறுப்பினர் ஆயினர். மேலும் சிலர் உறுப்பினர் ஆவர் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் 26-1-69, 2-2-69 ஆம் நாள்களில் காஞ்சி சிவத்தல வார வழிபாடு கற்கீசப் பெருமான் கோயிலிலும் பல பத்திரராமேசப் பெருமான் கோயிலிலும் நிகழ்ந்தது. 6-2-69ல் திருவேகம்பத்தில் திலகவதியம்மையார் திருநாளும் 9-2-69 ல் மெய்கண்ட தேவருக்குத் துறைசை ஆதீன மடத்தில் திருமுழுக்கு விழாவும் 10-2-69ல் காமாட்சியம்மையார் திருக்கோயிலில் தாயுமானவர் திருநாளும் சிறப்புற நிகழ்ந்தன. இவற்றில் திரு இராமநாத ஆச்சாரியார் திரு. C. திருநாவுக்கரசு முதலியார், திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் ஆகியோர் விரிவுரையாற்றினர்.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையில் 29-1-69ல் கண்ணப்ப நாயனார் திருநாள் கொண்டாடப் பெற்றது. இலஞ்சி திரு அ. இ. முத்துக்குமாரசாமி அவர்கள் "கானவர் சிங்கம்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். திரு. சிவப்பிரகாசம் நன்றி கூறினார்.

Printed at the Sengunthamithran Press, 33. Armenian Street, Madras by V. Sambandan. Edited by M Arunachalam, M A., and Published by S. Satchidanandam Pillai, B A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore. Madras-4.